புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# நாலடியார் நவிலும் அறச்சிந்தனைகள்

எ. சுதாலட்சுமி,
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
தமிழ்த்துறை, அரசு ஆடவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கிருட்டிணகிரி.

## முன்னுரை

அறம் என்பதற்கு நற்செயல்களின் தொகுப்பு என்று பொருள். மனித சமுதாயம் நலம்பெறவும், மனதைச் சீர்மை செய்யவும் பெரியோர்களின் நற்கருத்துகளை அறச்சிந்தனைகளாக அளித்துள்ளனர். சங்கம் மருவிய கால இலக்கியங்கள் பதினெட்டும் பதிணென் கீழ்க்கணக்கு நூல்கள் எனப்படுகின்றன. நீதிநூல் வரிசையில் திருக்குறளுக்கு அடுத்து சிறந்த அறநூலாகக் கருதப்படுவது நாலடியாராகும். நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனமையால் நாலடியார் எனப்படுகிறது. நாலடி நானூறு, வேளாண் வேதம் என்ற சிறப்புப் பெயர்களும் இந்நூலிற்கு உண்டு.

அறம், பொருள், இன்பம் என்ற முப்பிரிவுகளைத் தன்னகத்தே கொண்ட இந்நூல் வாழ்க்கைக்குத் தேவையான அறங்களை விளக்கக்கூடிய கருவூலமாகத் திகழ்கிறது. சமண முனிவர்களால் இயற்றப்பட்ட இந்நூல் திருக்குறளோடு ஒப்ப வைத்துப் பாராட்டப் பெறுகின்றது.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'

என்பது தமிழ்ப் பழமொழி, இதில் நாலு என்பது நாலடியாரையும், இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கின்றது. இந்நூலுக்கு பால், இயல், அதிகாரம் பகுத்தளித்தவர் பதுமனார். இந்நூலில் மூன்று பால்களும், பதினொறு இயல்களும், நாற்பது அதிகாரங்களும் அடங்கியுள்ளன. ஆதிகாரத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் மொத்தம் நானூறு பாடல்கள் உள்ளன. இந்நூல் நல்ல அறச்சிந்தனைகளை எடுத்தியம்புவதில் சிறந்ததாகும். அவற்றை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அறம் - விளக்கம்

ஒழுக்க நெறிகளுக்குரிய விதிமுறைகளின் தொகுப்பே அறம் எனப்படும். அறம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும், வளப்படுத்திக் கொள்ளவும் சமயங்களையும் அவை சார்ந்த மக்களின் நம்பிக்கைகளையும், இலக்கியங்களையும் பற்றுக் கோலாகக் கொண்டதாகும். அறங்கள் எதார்த்தத்தில் சமூக ஒழுங்கைப் பேணிப் பராமரிக்க ஏற்பட்டவை ஆகும்.

## நாலடியார் வலியுறுத்தும் அறம்

தமிழில் சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை பல்வேறு இலக்கிய வகைமைகள் உள்ளன. ஓவ்வொரு கால கட்டத்திலும் அதற்கேற்ப இலக்கிய வகைமைகள் உற்பத்தியாகி இருக்கிறன்றன. சங்க இலக்கியம் எனில் அகம், புறம் என்றும் சங்க மருவிகால இலக்கியங்கள் அறக்கருத்துக்களை வலிறுத்தும் இலக்கியம் என்றும் உருவாகி வளர்ந்திருக்கிறது. அவற்றில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

''வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் நின்புறுவர்
வைகலும் வைகல்தம் வாழ்நாள் மேல் வைகுதல்

வைகலை வைத்துணரா தார்''.

தினம் தினம் வெறுமே நாட்கள் கழிவதால் எப்பயனுமில்லை. தினந்தோறும் நாள் கழிதலை அறிந்தும், அதனை அறியாதவர்களாய், தினந்தோறும் நாள் கழிதல் நிலையாக நடந்துக் கொண்டிருக்கும் என்று களிப்பவர்கள் உண்மையான பேரின்பத்தை நாடுவதை விட்டுவிட்டு சிற்றின்பங்களிலேயே மாறித்திளைக்கின்றனர். இஃது தவறான அணுகுமுறை. மாற்றம் ஒன்றே மாறாதது. இதன் மூலம் அறம் பற்றிய தற்சார்புச் சிந்தனைகள் சமூகப் பரிமாற்றங்களை உள்ளடக்கியது என்பதை அறியமுடிகிறது.

வாழ்வோருக்கு நல்லறம் கற்பித்தல்

பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்டதுதான் வாழ்க்கை. அவ்வாழ்கையில் மனிதன் அறிய வேண்டிய நன்மை தீமைகளை அறிந்து, அஞ்ச வேண்டியப் பழி பாவங்களுக்கு அஞ்சி, தான் செய்யும் செயல்களால் உலகம் மகிழும்படி செய்து, அறநெறியில் வந்த பொருளால் மகிழ்ந்து வாழும் இயல்புடையவர்கள் எக்காலத்திலும் துன்பம் அடையமாட்டார் என்பதை நாலடியார்,

அறிவுதறிந்தடங்கி அஞ்சுவதஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது. (நாலடி 74)

என்கிறது.

தனிமனித அறம்

தனிமனித அறத்தில் முதன்மைப் பண்பாகக் கருதப்படுவது ஒழுக்கமேயாகும். தனிமனித வாழ்வில் ஒழுக்கம் என்பது எல்லா அறங்களுக்கும் அடிப்படையாக உள்ளது. பெரியோரைப் போற்றுதல், வறியவர்க்கு ஈதல், நட்பில் பிழை பொறுத்தல், இன்சொல் இயம்புதல், இளமையில் அறம் செய்தல் ஆகியன தனிமனித அறங்களாக நாலடியாரில் எடுத்துரைக்கப்படுகின்றன.

பெரியோரைப் போற்றுதல்

கல்வியில் சிறந்த சான்றோரைப் போற்றி அவர்தம் பின்பற்றி ஒழுகும் தன் வாழ்வில் எல்லா நிலைகளிலும் ஏற்றம் பெறல் வேண்டுமெனில் பெரியோரை மதித்தல் வேண்டும் என்கிறது நாலடியார், சான்றாக,

பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்த்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும் (நாலடி 161)
பெரியார் பெருமை சிறுதகைமை ஒன்றிற்
குரியாருரிமை யடக்கம் - தெரியுங்கால் (நாலடி 170)

எனும் பாடல் வரிகளைச் சுட்டலாம்.

வறியவர்க்கு ஈதல்

செல்வத்துப் பயனே ஈதல் ஆகும். எப்படியாவது பாடுபட்டுத் தேடி சேர்த்த செல்வத்தைப் பிறர்க்குக் கொடுக்காமல், பிற்காலத்தில் தனக்கு உதவும் என்று வாழ்பவர் வாழ்க்கை, கொல்லும் காலன் பிடியில் இருந்து மீளமுடியாது போகும். எனவே, பிறர்க்கு உதவி புரிந்து வாழும் வாழ்க்கையே இறவாப் புகழ்ப்பெற நன்நெறியில் செல்வதற்கான சிறந்த வழியாகும். இதனை,

கொடுத்தார் உயப்போவர் கோடில்தீக் கூற்றம்
தொழுத்தாறு செல்லும் சுரம். (நாலடி 5)

என்பதன் மூலம் அறியலாம். ஆகவே வறியவர்க்கு ஈதலே சிறந்த நன்மை பயக்கும் என்பதை அறியலாம்.

நிலையாமை குறித்த அறம்

அறநூல்கள் எழுதியவர்களின் அறக்கோட்பாட்டுச் சிந்தனைக்கு நிலையாமைதான் அடிப்படைக் காரணமாகும். திருவள்ளுவர் முதலான சங்க காலத்திற்குப் பின் வாழ்ந்த

ஆசிரியர்கள் நிலையாமையை யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை என்று மூன்றாகப் பிரித்தனர்.

"சாதலின் இன்னா ததில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"(திருக். 230)

என்ற குறட்பா, யாக்கை நிலையாமையைக் கூறுவதன் மூலம் ஈதல் அறத்தைப் புரிந்துக் கொள்ள முடிகிறது.

செல்வம் நிலையாமை குறித்த அறம்

"தகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்" (நாலடி 2)

ஒருவரிடத்தும் நிலையாகத் தங்காத செல்வத்தை, வண்டிச் சக்கரத்தின் சுழற்சிக்கு ஒப்பிட்டுக் கூறியமையால் இஃது செல்வம் நிலையாமையை வெளிப்படையாக வலியுறுத்துவதன் மூலம் பகுத்துண்ணும் அறத்தைச் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இளமை நிலையாமை குறித்த அறம்

"நரைவரும் என்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார் - புரைதீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
இன்னாங் கெழுந்திருப் பார்" (நாலடி - 11)

இஃது, இளமை நிலையாமையை வெளிப்படையாக வலியுறுத்தி, அதன் வாயிலாகத் துறவறமாகிய அறத்தை மேற்கொள்ளுமாறு அறிவுத்துவதாகும்.

விருந்தோம்பல் காட்டும் அறம்

சங்ககாலம் முதல் இன்றுவரை விருந்தோம்பல் பண்பே தமிழர்கள் மேன்மையாகக் கொண்டு திகழ வழி வகை செய்கிறது. விருந்தினரை உபசரிக்கும் தன்மையற்ற இல்லறம் நல்லறம் ஆகாது. தான் உண்பது அமிழ்தமே ஆயினும் விருந்தினர்களோடு சேர்ந்தே உண்ண வேண்டும் என்றபடியே நாலடியாரும் விருந்தினர் உபசரிப்பு குறித்து விளம்புகின்றது.

"குடநீர்அட் டுண்ணும் இடுக்கட் பொழுதும்
கடனீர் அறவுண்ணும் கேளிர் வரினும்
கடனீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்" (நாலடி 382)

சர்க்கரை கலந்த நீரைக் காய்ச்சிக் குடித்துப் பசியைத் தனிக்குமாறு தரித்திரம் வந்துள்ள பொழுதிலும் சமுத்திரத்து நீரையே மொத்தமாகக் குடித்து விடுமாறு அதிகமான உறவினர்கள் வந்துள்ள வேளையிலும் கடமை தவறாது அழகிய சொற்களையுடைய பெண்ணே மனை வாழ்க்கைக்குரிய மாண்புடையவளாகிறாள் என்ற விருந்தோம்பலின் அறத்தை மேன்மையாகக் கொண்டு பெண்கள் செயல்பட வழிவகுக்கின்றது.

கல்வி காட்டும் அறம்

விண்ணுலகத்தில் பெறும் இன்பத்தைக் கல்வி கற்றவர்கள் மண்ணுலகத்திலே பெறுவர். கல்வி நல்ல நெறியில் அறிவோடு வாழத் துணை புரிகின்றது. நல்ல நூல்களைக் கல்லாத இயல்புடைய மக்களுக்கு அறிவுடன் கூடிய ஒழுக்கம் ஏற்படுவது இல்லை என்பதை,

"ஓதாதவர்க்கு இல்லை உணர்வொரு ஒழுக்கம்" (நல். 91)

என்கிறார் ஔவையார். இதற்கிணங்க நாலடியார் கல்வியே சிறந்த செல்வம் என்பதை வலியுறுத்துகிறது.

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு" (நாலடி 131)

உள்ளத் தூய்மையைத் தரும் கல்வியே கல்வி என்று நாலடியார் கூறும் அறமே சிறந்த அறமாகும்.

*நிறைவுரை*

*உலக இலக்கியங்களில் செம்மொழித் தகுதியினையும் செவ்வியல் இலக்கியம் என்பதான பட்டியலினையும் உள்ளடக்கிய தமிழ் இலக்கியங்களில் தனக்கென ஒரு தன்னிகரில்லா இடத்தினைப் பெற்றுள்ள நாலடியார் சமுதாயம் சீர்பெற அறம் போற்றப்படல் வேண்டும், ஒவ்வொரு தனிமனிதனும் அறநெறி தவறாமல் நடந்தால் சமுதாய அமைப்பு முரண்பாடின்றி சிக்கலின்றி நன்னிலையில் விளங்கும் என்பதை நாலடியாரிலுள்ள அறக்கருத்துக்கள் மூலம் அறிய முடிகிறது.*

*பயன்பட்டவை*


1. *க.ப.அறவாணன் (உ.ஆ.,), புதிய பார்வையில் பதினெண் கீழ்க்கணக்கு – நாலடியார்.*
2. *பதினெண் கீழ்க்கணக்கு – நாலடியார் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம்.*
3. *கவிஞர் பத்மதேவன் (உ.ஆ.,), நாலடியார் மூலமும் உரையும், கற்பகம் புத்தகாலயம்.*
4. *பரிமேலழகர் (உ.ஆ.,), பதினெண் கீழ்க்கணக்கு திருக்குறள், கழக வெளியீடு.*
5. *ந.மு.வேங்கடசாமி நாட்டார், நல்வழி.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********